பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

இப்னு பாஸ் ﵀ வாழ்க்கைக் குறிப்பு 15

1 இறைநம்பிக்கை 19

1. நம்பிக்கையின்றி நன்மையில்லை 19

2. இறைநம்பிக்கையின் அடிப்படைகள் 20

விளக்கக் குறிப்புகள் 22

2 தவ்ஹீது 24

1. இதுதான் தவ்ஹீது 24

2. படைப்பின் நோக்கம் 24

3. தூதர்களின் முதல் அழைப்பு 25

• விளக்கக் குறிப்புகள் 26

3 வணக்கம் 29

1. வணக்கங்களின் உண்மைநிலை 29

2. இஸ்லாமும் ஈமானும் பிரியாதவை 30

3. லா இலாஹ இல்லல்லாஹ் - ஒரு விளக்கம் 30

4 தவ்ஹீதின் வகைகள் 32

1. தவ்ஹீதுர் ருபூபிய்யா 32

2. தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத் 33

3. இதுதான் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் அகீதா 34

4. அல்லாஹ், அர்ஷ்மீது உயர்ந்துவிட்டான் 40

• விளக்கக் குறிப்புகள் 42

5 மலக்குகள் 46

1. மலக்குகள்மீது நம்பிக்கை 46

2. சுருக்கமான நம்பிக்கை 46

3. விரிவான நம்பிக்கை 47

6 வேதங்கள் 48
1. சுருக்கமான நம்பிக்கை 48
2. விரிவான நம்பிக்கை 48
3. குர்ஆனைப் பின்பற்றுவது கட்டாயம் 49
7 தூதர்கள் 51
1. தூதர்கள்மீது நம்பிக்கை 51
2. சுருக்கமான நம்பிக்கை 51
3. விரிவான நம்பிக்கை 52
8 மறுமைநாள் 53
1. மறுமைநாள் மீது நம்பிக்கை 53
• விளக்கக் குறிப்புகள் 54
9 விதி 68
1. அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் 68
2. அல்லாஹ் அனைத்தையும் எழுதிவிட்டான் 68
3. அல்லாஹ் நாடுகிறான் 69
4. அல்லாஹ் படைக்கிறான் 69
10 ஈமான் 71
1. சொல்லும் செயலும் ஈமானில் அடங்கும் 71
2. விரும்புவதும் வெறுப்பதும் அல்லாஹ்வுக்காகவே! 72
11 நேர்வழி பெற்ற கூட்டம் 73
1. நபித்தோழர்கள் நபிமார்களுக்கு அடுத்தவர்கள் 73
2. நபித்தோழர்கள் - இறுதி வரை
நேர்வழியில் நிலைத்தவர்கள் 73
3. நபித்தோழர்களைப் பின்பற்றியோரே
பாதுகாப்பு பெற்றவர்கள் 75
12 வழிகெட்ட கூட்டங்கள் 77
1. இணைவைப்பவர்கள் 77
2. படைப்புகளிடம் பரிந்துரை கேட்பவர்கள் 78
3. நாத்திகம் பேசுபவர்கள் 80
4. பாத்தினிய்யாக்கள், சூஃபியாக்கள் 81
5. அடக்கத்தலங்களைப் பூஜிப்பவர்கள் 84
6. பித்அத் செய்பவர்கள் 84
7. உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் 86

1

இறைநம்பிக்கை

❀

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அவன் தனித்தவன். எவருக்குப் பிறகு எந்த நபியும் வரப்போவ தில்லையோ, அந்த நபி முஹம்மது மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் அனைவர்மீதும் ஈடேற்றம் உண்டாவதாக.

1. நம்பிக்கையின்றி நன்மையில்லை

இஸ்லாமிய மார்க்கத்தின் ஆணிவேராக, அஸ்திவாரமாக இருப்பது அதன் உண்மையான அகீதாவே. (அகீதா: மறைவான விசயங்கள் குறித்த உறுதியான நம்பிக்கை) அதனால்தான் இத்தலைப்பை எடுத்திருக்கிறேன். சொற்களும் செயல்களும் அல்லாஹ்விடம் ஏற்கப் படுவதற்கு அவை சரியான அகீதா அடிப்படையில் அமைந்திருப் பது அவசியம். அப்படி அமையாவிட்டால் சொற்களும் செயல் களும் வீணானவையே. மார்க்கத்தின் ஆதாரங்களான குர்ஆனிலும் நபிவழியிலும் இது தெளிவாக அறியப்பட்ட விசயம்.

وَمَنْ يَّكْفُرْ بِالْإِيْمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِيْنَ

எவன் நம்பிக்கைகொண்ட பின்னர் நிராகரிக்கிறானோ அவனு டைய நற்செயல் அழிந்தே போகும். மறுமையில் அவன் நஷ்டமடைந்தவனாகவே இருப்பான். (குர்ஆன் 5:5)

وَلَقَدْ أُوْحِيَ إِلَيْكَ وَإِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ لَئِنْ أَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخَاسِرِيْنَ

(நபியே) உமக்கும் உமக்கு முன்னிருந்த (தூது)வர்களுக்கும் திட்டவட்டமாக வஹ்யி[1] அறிவிக்கப்பட்டது (என்னவெனில்)

---

1 மொழி வழக்கில் வஹ்யி (وحي) என்றால் இரகசியமான தகவல் பரிமாற்றம், வெளிப்பாடு எனப் பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் இதன் பொருள்,

2

தவ்ஹீது

❀

1. இதுதான் தவ்ஹீது[1]

வணக்கங்களுக்குத் தகுதி வாய்ந்த உண்மையான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்று நம்புவதே அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளும் முறையாகும். ஏனெனில்,

- மனிதர்களைப் படைத்தவன் அவனே;
- அவர்களுக்கு நன்மை புரிபவன் அவனே;
- அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுபவன் அவனே;
- அவர்களின் மறைவான, வெளிப்படையான அனைத்து விசயங்களை அறிபவனும் அவனே;
- தனக்குக் கட்டுப்படுபவர்களுக்கு நற்கூலியையும், மாறு செய்பவர்களுக்குத் தண்டனையையும் கொடுப்பவன் அவனே.

2. படைப்பின் நோக்கம்

மனிதர்களையும் ஜின்களையும் படைத்ததின் நோக்கம், அவர்கள் தன்னை வணங்க வேண்டும் என்பதற்காகவே என அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلاَّ لِيَعْبُدُونِ مَآ أُرِيْدُ مِنْهُمْ مِّن رِّزْقٍ وَّمَآ أُرِيدُ أَنْ يُّطْعِمُوْنِ إِنَّ اللهَ هُوَ الرَّزَّاقُ ذُوْ الْقُوَّةِ الْمَتِيْنُ

ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்கே தவிர நான் படைக்கவில்லை.[2] அவர்களிடம் நான் எந்தப் பொருளையும் கேட்கவில்லை. எனக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்குமாறும் கோரவில்லை. நிச்சயம் அல்லாஹ்தான்

3

வணக்கம்

❀

1. வணக்கங்களின் உண்மைநிலை

அடியார்கள் தம் வணக்கங்கள் அனைத்தையும் அல்லாஹ்வுக்கு மட்டுமே செய்ய வேண்டும். அதாவது, பிரார்த்தனை, பயம், எதிர்பார்ப்பு, தொழுகை, நோன்பு, பலியிடல், நேர்ச்சை மற்றும் பிற வணக்கங்களையும் அல்லாஹ்வுக்கே செய்ய வேண்டும்.

வணக்கங்களில் அவனுக்கு முன் பணிவை வெளிப்படுத்த வேண்டும். அவனை நேசிக்க வேண்டும். அவனுக்கே பயப்பட வேண்டும். அவனுடைய கண்ணியத்திற்கு முன் ஆசையுடனும் பயத்துடனும் நடக்க வேண்டும். அதிகமான குர்ஆன் வசனங்கள் இந்த மகத்தான அடிப்படையில்தான் இறங்கியுள்ளன.

அல்லாஹ் கூறுகிறான்:

فَاعْبُدِ اللَّهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنِ أَلاَ لِلَّهِ الدِّيْنُ الْـخَالِصُ

முற்றிலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, தூய உள்ளத்துடன் அவனையே வணங்குவீராக. அறிந்துகொள்ளுங்கள்: தூய வணக்கம் அல்லாஹ்வுக்கே சொந்தம். (குர்ஆன் 39:2,3)

وَقَضَى رَبُّكَ أَلاَّ تَعْبُدُوْا إِلَّا إِيَّاهُ

(நபியே!) உம் இறைவன் தன்னைத் தவிர (யாரையும்) வணங்கக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறான்.. (குர்ஆன் 17:23)

فَادْعُوْا اللَّهَ مُـخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

(முஸ்லிம்களே!) அல்லாஹ்வை நிராகரிப்பவர்கள் வெறுத்தாலும் முற்றிலும் அவனுக்கே கீழ்ப்படிந்து, தூய உள்ளத்துடன் அல்லாஹ்வையே (பிரார்த்தித்து) அழையுங்கள். (குர்ஆன் 40:14)

4. அல்லாஹ், அர்ஷ்மீது உயர்ந்துவிட்டான்

إِنَّ رَبَّكُمُ اللهُ الَّذِيْ خَلَقَ السَمَاوَاتِ وَالأَرْضَ فِيسِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

'நிச்சயம் உங்கள் இறைவன் அல்லாஹ்தான். அவனே வானங்கள், பூமியை ஆறு நாட்களில் படைத்து, அர்ஷ்மீது உயர்ந்துவிட்டான்..' (குர்ஆன் 7:54)

இவ்வசனத்தில் உள்ள அல்இஸ்திவா எனும் சொல்லுக்கு அல்ஹாஃபிள் இப்னு கஸீர் ﷺ எழுதியுள்ள விளக்கம் மிகப் பயனுள்ளது. அதை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானது. அவர்கள் கூறினார்கள்:

أَنَّ لِلنَّاسِ فِي هَذَا الْمَقَامِ مَقَالَاتٍ كَثِيرَةً جِدًا لَيْسَ هذا موضع بسطها وَإِنَّمَا يَسْلُكُ فِي هَذَا الْمَقَامِ مَذْهَبَ السَّلَفِ الصَّالِحِ مَالِكٌ وَالْأَوْزَاعِيُّ وَالثَّوْرِيُّ وَاللَّيْثُ بْنُ سَعْدٍ وَالشَّافِعِيُّ وَأَحْمَدُ وَإِسْحَاقُ بْنُ رَاهَوَيْهِ وَغَيْرُهُمْ مِنْ أَئِمَّةِ الْمُسْلِمِينَ قَدِيمًا وَحَدِيثًا وَهُوَ إِمْرَارُهَا كَمَا جَاءَتْ مِنْ غَيْرِ تَكْيِيفٍ وَلَا تَشْبِيهٍ وَلَا تَعْطِيلٍ وَالظَّاهِرُ الْمُتَبَادَرُ إِلَى أَذْهَانِ الْمُشَبِّهِينَ مَنْفِيٌّ عَنِ اللهِ فَإِنَّ اللهَ لَا يُشْبِهُهُ شَيْءٌ مِنْ خَلْقِهِ وَ (لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ) (42 : 11) بَلِ الْأَمْرُ كَمَا قَالَ الْأَئِمَّةُ مِنْهُمْ نُعَيْمُ بْنُ حَمَّادٍ الْخُزَاعِيُّ شَيْخُ الْبُخَارِيِّ قَالَ مَنْ شَبَّهَ اللهَ بِخَلْقِهِ كَفَرَ وَمَنْ جَحَدَ مَا وَصَفَ اللهُ بِهِ نَفْسَهُ فَقَدْ كَفَرَ. وَلَيْسَ فِيمَا وَصَفَ اللهُ بِهِ نَفْسَهُ وَلَا رَسُولُهُ تَشْبِيهٌ فَمَنْ أَثْبَتَ مَا وَرَدَتْ بِهِ الْآثَارُ الصَّرِيحَةُ وَالْأَخْبَارُ الصَّحِيحَةُ عَلَى الْوَجْهِ الَّذِي يَلِيقُ بِجَلَالِ اللهِ وَنَفَى عَنِ اللهِ النَّقَائِصَ فَقَدْ سَلَكَ سَبِيلَ الْهُدَى

இந்த விசயத்தில் மக்கள் பல கருத்துகளில் இருக்கிறார்கள். அவற்றை இங்கு விரிவாக எழுத முடியாது. எனினும், இமாம்களாகிய மாலிக், அவ்ஸாயீ, ஸவ்ரீ, லைஸ் இப்னு சஅது, ஷாஃபிஈ[14], அஹ்மது, இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி[15] ﷺ போன்ற அஸ்ஸலஃபு

---

14 முஹம்மது இப்னு இத்ரீஸ் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 150 (கி.பி. 767)இல் ஷாம் நாட்டு கஸ்ஸாவில் பிறந்தார்கள். எட்டு வயதில் குர்ஆனையும், பத்தாம் வயதில் முவத்தாவையும் மனனம் செய்து முடித்தார்கள். சிறு வயதிலேயே தந்தையை இழந்தாலும், தாயின் வளர்ப்பால் மதீனா சென்று இமாம் மாலிக்கிடம் கல்வி படித்தார்கள். பிறகு, யெமன் சென்றார்கள். பின்னர் இராக்கில் இமாம் அபூஹனீஃபாவின் மாணவர் இமாம் முஹம்மது இப்னு அல்-ஹஸன் ﷺ அவர்களிடமும், எகிப்து சென்று இமாம் லைஸ் இப்னு சஅது ﷺ அவர்களின் மாணவர்களிடமும் கல்வி கற்றார்கள். ஹிஜ்ரீ 204இல் எகிப்தில் மரணித்தார்கள்.

15 ராஹவைஹி: இஸ்ஹாக் இப்னு இப்ராஹீம் இப்னு மிக்லத் அல்ஹன்ழலீ ﷺ

5

மலக்குகள்

❀

1. மலக்குகள்மீது நம்பிக்கை

மலக்குகள் மீதான நம்பிக்கையில் இரண்டு அம்சங்கள் உண்டு.

- ஒன்று, இஜ்மால் - சுருக்கமான நம்பிக்கை
- மற்றொன்று, தஃப்ஸீல் - விரிவான நம்பிக்கை

2. சுருக்கமான நம்பிக்கை

மலக்குகளைத் தனக்குக் கட்டுப்பட்டவர்களாக அல்லாஹ் படைத்துள்ளான். 'அவர்கள் கண்ணியமான அடிமைகள்; தங்கள் பேச்சில் அவனை முந்திப் பேசமாட்டார்கள்; அவன் கட்டளைப்படியே நடப்பவர்கள்' என்று அல்லாஹ்வினால் புகழப்பட்டவர்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

خُلِقَتِ الْـمَلاَئِكَةُ مِنْ نُوْرٍ وَخُلِقَ الْجَانُّ مِنْ مَارِجٍ مِنْ نَارٍوَخُلِقَ آدَمُ مِمَّا وُصِفَ لَكُمْ

மலக்குகள் ஒளியிலிருந்து படைக்கப்பட்டனர். ஜின்கள் நெருப்புக் கொழுந்திலிருந்து படைக்கப்பட்டனர். உங்களை எதிலிருந்து படைத்ததாக வருணித்துள்ளாரோ அதிலிருந்து (மண்ணிலிருந்து) ஆதம் படைக்கப்பட்டார். (ஆயிஷா ؓ, ஸஹீஹ் முஸ்லிம் 2996)

அல்லாஹ் கூறுகிறான்:

لاَ يَسْبِقُوْنَهُ بِالْقَوْلِ وَهُمْ بِأَمْرِهِ يَعْمَلُونَ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلاَ يَشْفَعُونَ إِلاَّ لِمَنِ ارْتَضَى وَهُمْ مِّنْ خَشْيَتِهِ مُشْفِقُوْنَ

அவர்கள் எந்த வார்த்தையும் மீறிப் பேசமாட்டார்கள். அவனுடைய கட்டளைப்படியே செயல்படுவார்கள். அவர்களுக்கு முன்(னே)உள்ள (எதிர்காலத்)தையும் அவர்களுக்குப் பின்(னே) உள்ள (இறந்த காலத்)தையும் அவன் நன்கறிவான். அவன்

7

தூதர்கள்

❀

1. தூதர்கள்மீது நம்பிக்கை

அல்லாஹ்வின் தூதர்களையும் சுருக்கமாகவும் விரிவாகவும் நம்பிக்கைகொள்வது நம் கடமை.

2. சுருக்கமான நம்பிக்கை

அல்லாஹ் தன் தூதர்களைத் தன் அடியார்களிடம் அனுப்பினான். அத்தூதர்கள் அவர்களுக்கு நற்செய்தி கூறினார்கள்; அவர்களை அச்சமூட்டி எச்சரித்தார்கள்; அவர்களைச் சத்தியத்தின் பக்கம் அழைத்தார்கள். எவர்கள் அத்தூதர்களின் அழைப்பை ஏற்றார்களோ அவர்கள் பாக்கியசாலிகள்; வெற்றியாளர்கள். எவர்கள் அவர்களை ஏற்க மறுத்தார்களோ அவர்கள் இழிந்தவர்கள்; நஷ்டவாளிகள்.

நம்முடைய நபி முஹம்மது இப்னு அப்துல்லாஹ் ﷺ அவர்கள் தாம் தூதர்களில் இறுதியானவர்; மிகச் சிறந்தவர். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُوْلاً أَنِ اعْبُدُواْ اللهَ وَاجْتَنِبُواْ الْطَّاغُوْتَ

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயம் ஒரு தூதரை அனுப்பவே செய்தோம். 'அல்லாஹ்வையே வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டு விலகுங்கள்' என்றே அவர்கள் கூறினார்கள். *(16:36)*

رُسُلاً مُّبَشِّرِينَ وَمُنذِرِيْنَ لِئَلاَّ يَكُوْنَ لِلنَّاسِ عَلَى اللهِ حُجَّةٌ بَعْدَ الرُّسُلِ وَكَانَ اللهُ عَزِيْزًا حَكِيْمًا

அல்லாஹ்மீது (குற்றம் கூற) மனிதர்களுக்கு எந்த ஆதாரமும் இல்லாதிருக்க, இத்தூதர்களுக்குப் பிறகும் பல தூதர்களை நற் செய்தி கூறுபவர்களாக, எச்சரிப்பவர்களாக (அனுப்பினோம்). அல்லாஹ் மிகைத்தவன்; ஞானமுடையவன். (குர்ஆன் *4:165*)

8

மறுமைநாள்

❀

1. மறுமைநாள் மீது நம்பிக்கை

அல்லாஹ்வும் அவன் தூதரும் இறுதிநாள் பற்றி அறிவித்த அனைத்தையும் நம்பிக்கைகொள்வது இதில் அடங்கும். அவை:

- மனிதன் இறந்த பின் மண்ணறையில் நடக்கும் சோதனை,[1]
- மண்ணறையின் துன்பங்கள்,[2]
- மண்ணறையின் இன்பங்கள்,[3]
- மறுமைநாளின் திடுக்கங்கள், தண்டனைகள், துன்பங்கள்,[4]
- சிராத் பாலம்,[5]
- மீஸான் தராசு,[6]
- கேள்விக்கணக்கு,[7]
- கூலி வழங்கப்படுதல்,[8]
- நன்மை தீமைகளின் பதிவேடு விரிக்கப்படுதல், அந்த ஏடுகளை வலக்கையிலோ இடக்கையிலோ முதுகுப் புறமாகவோ கொடுக்கப்படுதல்,[9]
- நம் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கு கவ்ஸர் தடாகம் வழங்கப்படுதல்,[10]
- சொர்க்கம்,[11]
- நரகம்,[12]
- மூஃமின்கள் தங்கள் இறைவனைப் பார்த்தல், அவனுடன் பேசுதல்[13]

இன்னும் இவற்றைப்போல் குர்ஆனிலும் ஆதாரமிக்க நபிமொழிகளிலும் வந்துள்ள அனைத்தையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

9

விதி

❀

விதி மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும். இந்த நம்பிக்கையில் நான்கு அம்சங்கள் உண்டு.

1. அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்

இதுவரை நடந்தவை, இனி நடப்பவை அனைத்தையும் அல்லாஹ் நன்கு அறிவான். தன் அடியார்களின் எல்லா நிலைமைகளையும் அவன் அறிவான். அவர்களின் வாழ்வாதாரம், தவணைக்காலம், செயல்பாடுகள் மற்றும் பிற நிலைகளையும் அவன் அறிவான். எதுவும் அவனுக்கு மறைந்ததில்லை என்று நம்ப வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ اللَّهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

நிச்சயம் அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிபவன். (குர்ஆன் 29:62)

أَنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ وَأَنَّ اللَّهَ قَدْ أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا

நிச்சயம் அல்லாஹ் ஒவ்வொரு பொருள் மீதும் ஆற்றலுடையவன் என்பதையும், நிச்சயம் அல்லாஹ் தன் அறிவால் ஒவ்வொரு பொருளையும் ஆழமாக அறிகிறான் என்பதையும் திட்டமாக அறிந்துகொள்ளுங்கள். (குர்ஆன் 65:12)

2. அல்லாஹ் அனைத்தையும் எழுதிவிட்டான்

அல்லாஹ் எதைச் செய்யத் தீர்மானித்தானோ, எதை விதியாக நிர்ணயித்தானோ அவை அனைத்தையும் எழுதிவிட்டான் என்று நம்ப வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

قَدْ عَلِمْنَا مَا تَنْقُصُ الْأَرْضُ مِنْهُمْ وَعِنْدَنَا كِتَابٌ حَفِيظٌ

12

வழிகெட்ட கூட்டங்கள்

❀

1. இணைவைப்பவர்கள்

- சிலைகளையும் உருவப்படங்களையும் வணங்குபவர்கள்,
- இறந்தவர்களின் சமாதிகளை வணங்குபவர்கள்,
- மலக்குகள், நல்லடியார்கள், ஜின்கள், மரங்கள், கற்கள் மற்றும் படைப்புகள் அனைத்தையும் வணங்குபவர்கள்

இவர்கள்தாம் வழிதவறிய கூட்டங்கள்.

இவர்கள் அனைவருமே நபிமார்களின் அழைப்பை ஏற்க மறுத்தவர்கள்.

குறைஷிகளும் சில அறபுக் கூட்டங்களும் நபியவர்களை மறுத்து, மாறுசெய்தார்களே அவர்களைப் போன்றவர்கள்.

- அந்த மக்கள் தாங்கள் வணங்கிய பொய் தெய்வங்களிடம் தேவைகளைக் கேட்டார்கள்.
- நோயாளிகளைக் குணப்படுத்தவும், எதிரிகளை வெற்றி கொள்ளவும் அத்தெய்வங்களிடமே உதவி தேடினார்கள்.
- அவற்றுக்காக அறுத்துப் பலியிட்டார்கள்; நேர்ச்சை செய்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ இவை அனைத்தையும் மறுத்து, வணக்கங்களை அல்லாஹ்வுக்கு மட்டுமே தூய்மையாகச் செய்யும்படி கட்டளையிட்டபோது, அதைப் பெரும் ஆச்சரியமாகக் கூறி நிராகரித்தார்கள். அவர்கள் கூறியதை அல்லாஹ் கூறுகிறான்:

أَجَعَلَ الْآلِهَةَ إِلَـٰهًا وَاحِدًا إِنَّ هَـٰذَا لَشَيْءٌ عُجَابٌ

(இணைவைப்போர் கூறினார்கள்:) என்ன! எல்லாத் தெய்வங்களையும் இவர் ஒரே தெய்வம் ஆக்கிவிட்டாரா? உண்மையில், இது ஓர் ஆச்சரியமான விசயம்தான். (குர்ஆன் 38:5)

இவர்களின் நடவடிக்கைகளை இவர்களுடன் இருந்து கவனிப் போருக்கு இது நன்கு விளங்கும்.

5. அடக்கத்தலங்களைப் பூஜிப்பவர்கள்

எகிப்து நாட்டில் ஹுசைன், பதவீ மற்றும் பலருடைய அடக் கத்தலங்களிலும், ஏடனில் அய்தரூஸ் என்பவரின் அடக்கத் தலத்திலும், எமனில் ஹாதி என்பவரின் அடக்கத்தலத்திலும், சிரியாவில் இப்னு அறபியின் அடக்கத்தலத்திலும், இராக்கில் ஷெய்க் அப்துல் காதிர் ஜீலானி ﵀ அவர்களின் அடக்கத்தலத்தி லும் இவை தவிர இன்னும் பல பிரபலங்களின் அடக்கத்தலங் களிலும் எத்தனை எத்தனை கொடுமைகள்! பார்ப்பவர்களுக்குப் புரியும்! இந்த இடங்களில் மக்கள் வரம்பு மீறுகிறார்கள். அல் லாஹ்வுக்குரிய வணக்கங்களில் அதிகமானவற்றை அங்கு அடங்கி யிருப்பவர்களுக்குச் செய்கிறார்கள்.

தன் தூதர் முஹம்மது ﷺ அவர்களையும், அவர்களுக்கு முந்திய நபிமார்களையும் எந்தத் தவ்ஹீதை விளக்குவதற்காக அல்லாஹ் அனுப்பினானோ, அதை விளக்கிச் சொல்பவர்களும், மேற்கண்ட பித்அத்களை வெறுத்துத் தடுப்பவர்களும் மிகக் குறைந்துவிட் டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்லக்கூடியவர்கள்.)

அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்: அவர்களை நேர்வழியில் அல்லாஹ் செலுத்துவானாக! நேர்வழியில் அழைக்கும் உண்மை அழைப்பாளர்களை அவர்களுக்கு மத்தியில் பெருக்குவானாக! ஷிர்க்கை எதிர்த்துப் போராடும் அறிஞர்களுக்கும் வழிகாட்டிகளுக் கும் அருள்புரிவானாக! அவனே அனைத்தையும் செவியுறுப வன்; அருகிலுள்ளவன்.

6. பித்அத் செய்பவர்கள்

ஜஹ்மிய்யா, முஅதஸிலா[20] கூட்டத்தினரும் அவர்களின் வழியில் செல்வோரும் அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை மறுக்கிறார் கள்; முழுமை பெற்ற அவன் பண்புகளை அவனுக்கு இல்லை என்று

---

20 முஅதஸிலா: ஹிஜ்ரீ 2ஆம் நூற்றாண்டில் இமாம் அல்ஹசன் அல்பசரீ ﵀ அவர்களின் சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட வாசில் இப்னு அதாஉ